# கண்ணதாசன் பார்வையில் ஆன்மீகம்

முனைவர் செ.மார்கண்டன்
இணைப்பேராசிரியர்
வேல்ஸ் பல்கலைக்கழகம்
சென்னை – 117

## முன்னுரை

கண்ணதாசன் வாழ்வும் படைப்பும் முரண்பாடு உடையது. கண்ணதாசனின் இளமை வாழ்வு என்பது ஆன்மீகத்தைச் சார்ந்தும், இடைப்பட்ட வாழ்வு முற்போக்கும் திராவிட சிந்தனை சார்ந்தும் இருந்துள்ளது. வாழ்வின் பிற்பகுதி ஆன்மீகத்தில் மிகவும் தோய்ந்த வாழ்வையும் படைப்பையும் காணமுடிகிறது. இப்படி மாறுபட்ட கருத்தை உடைய கண்ணதாசன் படைப்புகளில் ஆன்மீகச் சிந்தனை என்னவாக பதிவாகியுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கடவுள் நெறியில் அவர் கட்டுண்டு, நம்மையெல்லாம், ஆன்மீக நெறியில் ஆழ்ந்துபோகச் செய்த அவரது கவிதைகள், நமது நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பிடித்திருப்பதை மறுப்பதற்கில்லை. கண்ணதாசனின் கடவுள் நெறிப் பயணமே அவருக்கு ஆணிவேராய் அமைந்தது. அந்தக் கடவுள் நெறி அவரது நெஞ்சத்தில் எப்படிப் புகுந்தது? பிறவி வாசத்தில் அவரிடம் உலாவி வந்த கடவுள் நெறி, திராவிட சிந்தனைக்கு ஆட்பட்டு, பிறகு மீண்டும் ஆன்மீகத்தில் ஆதிக்கம் செலுத்தியது எப்படி?என்ற வினாவின் தேடலே இக்கட்டுரையின் களமாகும்.

**ஆன்மீகச் சிந்தனை**

கவியரசர் பாடிய பாடல்களில் கருத்துவளம், பழம்பெருமை, சமூகச் சிந்தனை, தத்துவம், புரட்சிக்கருத்துகளை ஆன்மீக சிந்தனையுடன் கலந்து கொடுத்தவர் கண்ணதாசன். கண்ணன் புகழைப் பாடிய கண்ணதாசனை மற்றொரு ஆழ்வார் என்று சொல்லுமளவுக்கு, மக்கள் மனங்களில் நிறைந்தவர். இந்து தத்துவத்தின் மேன்மையைக் கட்டுரைகள் மூலம் உயர்த்தி உண்மை நெறியை விளக்கிப் போற்றியவர். பாடல்களில் எங்கெங்கு இயலுமோ அங்கெல்லாம் கருத்து வளத்துடன் ஆன்மீகச் சிந்தனையை பாடல்களின் வழியே மக்களிடம் விதைத்தவர் கண்ணதாசன்.

**"இறைவன் என்னைப் படைத்தான் வாழ்வும் கொடுத்தான்**
**எனக்கொரு உலகம் காட்டினான்"**

என்று 'வியட்நாம் வீடு' படத்தில், நடிகர் திலகத்தைப் புகழ்வது போல் பாடிய இடத்திலும் இறை கொள்கையைப் பாடத் தயங்கவில்லை என்பதை புரிந்துகொள்ள முடிகிறது.

"அறுபடை வீடு கொண்ட திருமுருகா! - திரு முருகாற்றுப் படைதனிலே வருமுருகா-முருகா பாட்டுடைத்தலைவன் என்று உன்னை வைத்தேன்- உன்னை பாடித் தொழுவதற்கே என்னை வைத்தேன்!" *(கண்ணதாசன்; திரை இசைப் பாடல்கள்; 2011;9)* என்னும் கந்தன் கருணை பாடலில் கண்ணதாசனின் ஆன்மீகச் சிந்தனை வெளிப்படுவதைக் காணலாம்.

"தீபம் காட்டுவதால் மட்டுமே தெய்வ தரிசனம் கிடைத்து விடுமா? குத்து விளக்கிலும் தீபாராதனையிலும் தெய்வம் காட்சியளிப்பதில்லை. ஆனால், 'தெய்வத்துக்குச் செய்கிறோம்' என்ற பக்தி முக்கியம். உணர்வோடு செய்கிறோமே,அதுதான் முக்கியம்." *(கண்ணதாசன்;தெய்வ தரிசனம்;1994;24)* என்னும் கண்ணதாசனின் ஆன்மீக கூற்று இறைவனின் அருளைப் பெற பகட்டான பக்தியை கடந்து உணர்வான பக்தியே உண்மை நெறி கிடைக்க வழி வகுக்கும் என்பதை உணர்த்துகிறது.

"போயும் போயும் மனிதனுக்கிந்த புத்தியைக் கொடுத்தானே! - இறைவன் புத்தியைக் கொடுத்தானே! - அதில் பொய்யும் புரட்டும் திருட்டும் கலந்து பூமியைக் கெடுத்தானே - மனிதன் பூமியைக் கெடுத்தானே!" (த.இராமலிங்கம்; காற்றில் தவழும் கண்ணதாசன்; 2012;114) 'தாய் சொல்லைத் தட்டாதே' திரைப்படத்தில் இடம் பெற்றப் பாடல் இது. மனிதனுக்கு மட்டும்தான் ஆறாம் அறிவு என்னும் சிந்தனை ஆற்றலைக் கொடுத்துள்ளான் இறைவன். ஆனால் மனிதனோ அப்படிக் கொடுத்தது அறிவை தப்பாகப் பயண்படுத்துகின்றனே என்ற மன வருத்தத்தை அவதானிக்க முடிகிறது. அந்த அறிவின் காரணமாகவே, எல்லாவகையான திருட்டுத்தனங்களையும் கலந்து, பூமியையே கெடுத்துவிட்டான் மனிதன் என்ற மனக்கவலையை புரிந்துகொள்ள முடிகிறது.

"இருப்பவனுக்கு எத்தனை வயிறு எல்லோருக்கும் ஒரு சாண் வயிறு ஆண்டவனை நேரில் பார்த்தால் இதையே கேட்பேன் சரியா என்று. கேட்டவுடனே அவனும் சொல்வான் 'நானா இதைப் படைத்தேன்' என்று. எல்லோருக்கும் வயிறு ஒன்றுதான். ஆனால், செல்வ நிலைகளில் வேறுபாடுகள் நிலவுவதற்குக் காரணம் யார்..? கேட்டால், 'ஐயோ... நானில்லை... என்று இறைவன் சொல்லிவிடுவானாம்! அனைத்து வேறுபாடுகளுக்கும் காரணம் மனிதனே என்பதை இப்படிச் சொல்கிறது பாடல்". (த.இராமலிங்கம்; காற்றில் தவழும் கண்ணதாசன்; 2012;157) இப்படி இறைவனுக்கும் மன்னனுக்கும் உள்ள தொடர்பை நையாண்டி செய்கிறது இக்கவிதை.

"இறைவன் இரண்டு பொம்மைகள் செய்தான் தான் விளையாட அவை இரண்டும் சேர்ந்தொரு பொம்மையை செய்தன தாம் விளையாட" (கவிபாஸ்கர்; காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன்; 2015;49) இப்படி இறைவனை வைத்து மனிதன் விளையாடுவதை வேடிக்கையாக வெளிப்படுத்துகிறார் கண்ணதாசன். கண்ணதாசன் பிற்காலத்தில் ஆன்மீகச் சிந்தனையில் தன்னை இணைத்துக் கொண்டாலும் திராவிட இயக்கத்திலிருந்து புறப்பட்ட பல்வேறு படைப்பாளிகளில் கண்ணதாசனும் ஒருவர் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

**கண்ணதாசனின் மாற்றம்:**

கண்ணதாசன் எப்போதும் ஒரு நிலையில் இருக்க மாட்டார். தன்னை மாற்றிக் கொண்டே இருப்பார் என்பதற்குக் கண்ணதாசனே சாட்சி. அதை அவரே பல இடங்களில் சொல்லியிருந்தாலும் அவர் படைப்புகளின் வெளிப்படும் போதுதான் அதன் எதார்த்தம் புரிகிறது.

" மாற்றம் எனது மானுடத் தத்துவம்
மாறாதிருக்க நான் மரமா செடியா?"

(கவிபாஸ்கர்; காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன்; 2015;62)என்று கண்ணதாசன் எழுப்பும் வினா கவனிக்கதக்கதாகும். மாற்றம் எனது "மானுடத் தத்துவம்" என்ற வரையில் எந்தச் சிக்கலும் இல்லை. ஆனால் மாறாதிருக்கிறவர்களைப் பார்த்து "மரமா செடியா?" என்று விமர்சித்துவிட்டு அவர் தன்னை மாற்றிக் கொள்வதற்குப் பாதை வகுத்துக்கொள்கிறார். மாறாக, மாற்றங்கள் உடையதே மனித இனம் என்ற உயர்ந்த தத்துவத்தை வெளிப்படுத்துவதுடன், சுயப்பரிசோதனைக்கு தன்னையும் ஆட்படுத்திக்கொள்வது பாராட்டிற்குரியதாகும்.

**கண்ணதாசனின் மத நல்லிணக்கம்**

கண்ணதாசன் ஒரு புதிர் என்றே பலர் விமர்சிப்பது உண்டு. முரண் பாட்டின் மொத்த உருவம் என்றும் கூறுவர். தொடக்க காலத்தில் அவர் நாத்திகர், பிறகு அவரைப்போல் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து பாடியவர்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு ஆன்மீகத்தில் ஆழ்ந்து மூழ்கியவர் கண்ணதாசன். அவர் கவிதையின் தாக்கத்தால் நாத்திகரெல்லாம் ஆத்திகராக மாறிய வரலாறும் உண்டு. பல பெயர்களில், கடவுள் அழைக்கப்படலாம். பல வடிவங்களில் கடவுள் காட்சி தரலாம். ஆனால் அவர் ஒருவரே. எந்த மதத்துத் தெய்வமானாலும் அவர் அன்பு வடிவானவர். இந்தத் தத்துவத்தைக் கவியரசர், பல இடங்களில், பல சூழ்நிலைகளில் தன் படைப்புகளில் வெளிப்படுத்தியவர் கண்ணதாசன்.

அவருடைய படைப்புகளில் ஆன்மீக நெறித் தத்துவத்தை பரவலாக எங்கும் காணலாம். ‘‘எல்லோரும் கொண்டாடுவோம்! அல்லாவின் பெயரைச் சொல்லி நல்லோர்கள் வாழ்வை எண்ணி

எல்லோரும் கொண்டாடுவோம்!" (எஸ்.பி.ராஜா; கண்ணதாசன் கவிதைகளில் கடவுள் நெறி; 2001;6) இப்படி மத வேறுபாடு இன்றி இஸ்லாமிய மதத்தையும் கொண்டாடியவர் கண்ணதாசன். இஸ்லாம் சார்ந்த பற்றுதலை 'பாவமன்னிப்பு'ப் படப்பாடலில் இப்படி கொண்டாடி இருப்பதை அனைவரும் அறிவோம். இந்தப் பாடலிலுள்ள பேதமற்ற கடவுள் நெறியைப் போல் உயர்வாக பேதமறு படைத்துக் காட்டிய கண்ணதாசனைக் கவியரசு என்று போற்றுவதில் தவறொன்றுமில்லை.

கடவுள் நெறிப் பாடல்கள் கவிஞரின் சமயப் பற்றையும், ஆன்மீக உணர்வையும், சமய பேதமில்லா நெறியையும் தெள்ளத் தெளிவாக தனது படைப்புகளில் படைத்து ஆன்மீக எழுச்சியை எழச் செய்தவர் கண்ணதாசன். கவியரசரின் கடவுள் நெறிக்குச் சான்றாகப் 'பிராப்தம்' எனும் படத்தில் அவர் எழுதிய பாடல் அடிகள் மத நல்லிணக்கத்திற்கு தக்கச் சான்றாக முன்வைக்கலாம்.

**"எந்தக் கோவில் ஆனால் என்ன? தெய்வம் தெய்வம்தான்! எந்தத் தெய்வம் ஆனால் என்ன? கோவில் கோவில்தான்! ஓடும் நதியின் நீரும் ஆடும் கடலில் சேரும்! கரையில் நிற்கும் நாணல் கண்ணீர் சிந்தலாமா?..."** (எஸ்.பி.ராஜா; கண்ணதாசன் கவிதைகளில் கடவுள் நெறி; 2001;22) இத்தகைய கூற்றுகள் சமயம் கடந்த ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதாகும். ஆறுகள் எல்லாம் கடலில் சென்று கலப்பது போல், எல்லா தெய்வங்களும் ஒன்று, என்ற தீர்க்கமான கொள்கையை உடையவர் என்பதை அறிய முடிகிறது.

இந்துவும், முஸ்லீமும், கிருத்தவமும், புத்தமும், சமணமும், சீக்கியமும் இன்னபிற மதத்தவரும் சேர விரும்பும் இடம் வீடுபேறு என்ற நிலைப்பாட்டை உடையவர் கண்ணதாசன். "புத்தன் வழியில் அசோகன் சேவை புரிந்தது எதற்காக? இவ்வாறு வினாக்களை எழுப்பி, புத்தனின் புனிதத் தத்துவம் மலர்ந்ததையும், மாமன்னன் அசோகனின் தர்மசக்கரம் சுழன்றதையும், புன்னகை பூத்த மனிதன் இயேசுபிரானின் அன்பு மலர்ந்த இல்லமாய் இந்நாடு இருப்பதையும் கவியரசர் கட்டிக்காட்டினார்." (எஸ்.பி.ராஜா; கண்ணதாசன் கவிதைகளில் கடவுள் நெறி; 2001;126) எல்லா மத கடவுளையும் ஒரே நேர்கோட்டில் பாவித்தவர் கண்ணதாசன்.

"தேவன் கோயில் நாதம் உன் ஒலியோ? திருச்சபை ஒலிக்கும் கீதம் உன் குரலோ?" என்று, அன்புள்ளம் கொண்டவனை வர்ணிக்கும்போது கூட, ஆண்டவன் இயேசுவின் கோயில் நாதத்தை, திருச்சபை கீதத்தை நினைவுறுத்திப் பெருமை சேர்க்கும் கவி வேந்தனை தமிழ்கூறும் நல்லுலகம் என்றும் மறவாது என்பது திண்ணம்.

### முடிவுரை

அனைத்து மதங்களும், அவரவர் கோட்பாட்டில் கூறும் பரம்பொருள் ஒன்றே. அந்தப் பரம் பொருள் பெற்றுத்தரும் வீடுபேற்றை அடைய விரும்பாதார் எம்மதத்திலும் இல்லை. அத்தகு பரம்பொருளை எவரும் எவ்வடிவிலும் காணலாம். அதற்கு மத இன வேறுபாடுகள் வேண்டாம் என்பதே கவியரசரின் கொள்கையாக இருப்பதை அறிவோம்.திராவிடச் சிந்தனை,தேசியச் சிந்தனை இவற்றை கடந்து ஆன்மீகச் சிந்தனைகளே கண்ணதாசன் படைப்புகளில் மேலோங்கி இருப்பதை இக்கட்டுரை முன்வைப்பதாகும்.

### பார்வை நூல்கள்


1. கண்ணதாசன்-திரை இசைப் பாடல்கள், முதல் பாகம்-பதிப்பு-2011, கண்ணதாசன் பதிப்பகம், 23, கண்ணதாசன் சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017
2. கவிஞர் கண்ணதாசன் -தெய்வ தரிசனம், பதிப்பு- 1994, கங்கை புத்தகநிலையம், 13, தீனதயாளு தெரு,, தி. நகர், சென்னை -17.
3. த.இராமலிங்கம்- காற்றில் தவழும் கண்ணதாசன், விகடன் பிரசுரம் -பதிப்பு-2012
4. எஸ்.பி.ராஜா- கண்ணதாசன் கவிதைகளில் கடவுள் நெறி, பதிப்பு-2001, ராஜேஸ்வரி புத்தக நிலையம், முத்துகிருஷ்ணன் தெரு, த.பெ.எண்.8865, பாண்டிபஜார் அருகில், தியாகராய நகர், சென்னை -600 017.
5. கவிபாஸ்கர்-காற்றில் மிதந்து வருகிறார் கண்ணதாசன், பதிப்பு-2015, புல்லாங்குழல் -வெளியீடு, வளசரவாக்கம், சென்னை.

# அழகப்பா பல்கலைக்கழகம்

## தமிழ்ப் பண்பாட்டு மையம்

காரைக்குடி.

## தமிழ் நாடு தமிழ்ச் சங்கம்

இணைந்து நடத்திய

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

### நற்சான்றிதழ்

முனைவர் செ. மார்கண்டன் அவர்கள்
18.07.2025 அன்று **பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்** என்னும் பொருண்மையில் நடத்தப்பட்ட பன்னாட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு.கண்ணதாசன்....பார்வையில்.....ஆன்மீகம்........................ என்னும் தலைப்பில் ஆய்வுக் கட்டுரை வழங்கியமையைப் பாராட்டி நற்சான்று வழங்கிச் சிறப்பிக்கின்றோம்.

**முனைவர் அ.செந்தில் ராஜன்**
பதிவாளர் - அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி.

**முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை**
இயக்குநர் - தமிழ்ப்பண்பாட்டு மையம், அழகப்பா பல்கலைக்கழகம்,
காரைக்குடி

**முனைவர் இரா. ஹேமலதா**
தலைவர் - தமிழ் நாடு தமிழ்ச் சங்கம்
இணைப்பேராசிரியர் (ப) தமிழ்த்துறைத் தலைவர்
அன்னை தெரசா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருக்கழுக்குன்றம்,
செங்கல்பட்டு

**முனைவர் தா.நீலகண்டன்**
கௌரவ ஆலோசகர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம்
மேனாள் தமிழாய்வுத் துறைத் தலைவர்,
தெ.தி. இந்துக் கல்லூரி, நாகர்கோவில்.

**ம.முனைவர் பொன். ஆதவன்**
பொதுச் செயலாளர் - தமிழ் நாடு தமிழ்ச் சங்கம்,
திண்டிவனம்.

**தமிழ்த்திரு ஏ.பிரகாஷ்**
பொருளாளர் - தமிழ் நாடு தமிழ்ச் சங்கம், விழுப்புரம்.

**கவிஞர் கார்த்திக் திலகன்**
நிர்வாக ஆலோசகர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம்,
கடலூர்.

**தமிழ்ச்செம்மல் கவிதை கணேசன்**
ஆலோசகர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம்,
பண்ருட்டி.

**தொல்காப்பியத் தென்றல் இர.தேன்மொழி**
நெறியாளுகைச் செயலாளர் - தமிழ் நாடு தமிழ்ச்சங்கம்.
பெங்களூர்.

# அழகப்பா பல்கலைக்கழகம்

## தமிழ்ப் பண்பாட்டு மையம்

காரைக்குடி

மற்றும்

## தமிழ் நாடு தமிழ்ச் சங்கம் இணைந்து நடத்திய

பன்னாட்டுக் கருத்தரங்கம்

ஆய்வுக்கோவை



# பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்


தொகுப்பாசிரியர்கள்

முனைவர் சே.செந்தமிழ்ப் பாவை

முனைவர் இரா.ஹேமலதா

ம.முனைவர் பொன். ஆதவன்

# பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் **சே.செந்தமிழ்ப்பாவை**

முனைவர் **இரா.ஹேமலதா**

மதிப்புறு முனைவர் **பொன்.ஆதவன்**

வெளியீடு

அழகப்பா பல்கலைக்கழகம்

தமிழ்ப் பண்பாட்டு மையம்,

காரைக்குடி.

# நூல் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன் |
| தொகுப்பாசிரியர்கள் | : | முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை<br>முனைவர் இரா.ஹேமலதா<br>மதிப்புறு முனைவர் பொன்.ஆதவன் |
| உரிமை | : | பதிப்பகத்தார்க்கு |
| நூல்பொருள் | : | ஆய்வுக்கோவை |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பாண்டு | : | 2025 |
| அளவு | : | 1/8 டெம்மி |
| பக்கங்கள் | : | 530 |
| விலை | : | ரூ.500/- |
| வடிவமைப்பு | : | கா. குணசேகரன் (7639819399) |
| அச்சு | : | எஸ்.எஸ்.எண்டர்பிரைசர்ஸ்,<br>சென்னை (9940802363) |
| வெளியீடு | : | அழகப்பா பல்கலைக்கழகம்<br>தமிழ்ப் பண்பாட்டு மையம்,<br>காரைக்குடி.<br>9486550725, 8778911868 |
| ISBN No | : | 978-93-343-4478-3 |


ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களின் பொறுப்புக்குரியவை

14. கண்ணதாசன் கவிதைகளில் அறிவியல் சிந்தனை
செ. செல்வம் 137

15. கண்ணதாசன் கூறும் வாழ்வியல் நெறிகள்
முனைவர் இரா.ரம்யா 142

16. பன்முக நோக்கில் கவியரசர் கண்ணதாசன்
கு.திருமுருகானந்தன் 148

17. கண்ணதாசனின் இயேசு காவியம்: ஓர் உண்மை ஓவியம்
முனைவர் அ. சுகந்தி அன்னத்தாய், 158

18. கண்ணதாசனின் திரையிசைப் பாடல்களில்
திருக்குறள் பயன்பாடு
முனைவர் கா. சந்தானலெட்சுமி, 165

19. கண்ணதாசனின் மாங்கனி காவியத்தில் பாத்திரங்களின் ஆளுமை
- முனைவர் தே.தேன்மொழி 175

20. கண்ணதாசன் கவிதைகளில் சமூகச் சிந்தனை
க. உஷாநந்தினி 186

21. கண்ணதாசன் கூறும் 'நெஞ்சுக்கு நிம்மதி'
முனைவர் கே. இரா. கமலாமுருகன், 190

22. கண்ணதாசன் திரைப்படப் பாடல்களில் சொற்சிலம்பம்
முனைவர் க.மங்கையர்க்கரசி 197

23. கண்ணதாசன் திரையிசைப் பாடல்களில்
பெரிய புராண நாயன்மார்கள்.
வைத்திய கலாநிதி சி. சிவகலை. 203

24. கண்ணதாசன் பாடல்களில் எம்.ஜி.ஆர் ஆளுமை
கு.மு.ரமேஷ்பாபு & முனைவர் தே.தேன்மொழி, 209

25. கண்ணதாசன் பார்வையில் ஆன்மீகம்
முனைவர் செ.மார்கண்டன் 222

26. தமிழ் இலக்கியமும் கவியரசர் கண்ணதாசனும்
சு. கோபாலகிருஷ்ணன், 228

27. கவியரசு கண்ணதாசனின் பாடல்களில்
சங்க இலக்கியத்தின் தாக்கம்
மதிப்புறு முனைவர் ஜோதி மினாக்ஷி 234

28. கவியரசு கண்ணதாசனின் பாடல்களில் மகளிர்
திருமதி. இரா.இராஜாமணி. 240